பழுதுபார்க்க வாய்ப்பில்லை என்பதால், எங்களால் அதற்கு நிதியொதுக்க இயலவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, இதுபோன்ற பழுதடைந்த கட்டடங்களைச் சீரமைக்க சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்த வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

16—

முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலை

***5625—திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முந்திரி என்பதனால் முதல் கட்டமாக அவைக்கு ஒரு தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன். முந்திரிக்கு தமிழ்நாடு அரசின் வணிக வரி 5 சதவிகிதமாக இருந்தது. இது சரக்கு மற்றும் சேவை வரியில் 12 சதவிதமாக உயர்ந்துவிட்டது. பண்ருட்டி முந்திரி ஏற்றுமதியாளர் சங்கம், இதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் முறையிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதனை GST Council—ல் கலந்துகொள்கிற மாண்புமிகு மீன் வளம் மற்றும் நிதியமைச்சர் அவர்களிடம் கொண்டு செல்லுங்கள் என்று குறிப்பிட்டார்கள். அவர்களும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைச் சந்தித்தபின், 11—6—2017—ல் நடைபெற்ற

GST Council–கூட்டத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் அதைக் குறிப்பிட்டு பேசினார்கள். அதன் காரணமாக முந்திரிக்கு GST Bill–ல் 12 சதவிகிதமாக இருந்த வரி விதிப்பு, தற்சமயம் 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது என்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும் பண்ருட்டி முந்திரி ஏற்றுமதியாளர் சங்கத்தின் சார்பாக முதற்கட்டமாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில் முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் வசம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பினும் டிட்கோ நிறுவனத்துடன் இணைந்து தொழில் முனைவோர்கள் முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க முன்வந்தால், டிட்கோ அந்தத் திட்டத்திற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து உடனடியாகத் தொடங்குவதற்குண்டான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணைவிட்டு மறைந்தாலும், உலகத் தமிழர்கள் அத்தனைபேர் மனதிலும் மறையாமல் வங்கக் கடலோரத்திலே, சந்தனப் பேழையிலே மீளாத் துயில் கொண்டிருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் ஓர் எள் முனைகூட பிறழாமல் வீரத்தோடும், விவேகத்தோடும், விரைவாகவும் செயல்பட்டு இன்றைக்கு இந்தியாவிலேயே முதன்மை முதல்வராக விளங்குகின்ற தமிழக முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதியில் எந்தவிதமான தொழிற்சாலையும் இதுவரை அமைக்கப்படவில்லை. அந்தப் பகுதி மக்கள் விவசாயப் பணிகளை மட்டுமே இன்றைக்கு நம்பியிருக்கின்றார்கள். ஜெயங்கொண்டம் அருகில் சின்னவளையம், பெரியவளையம், கடாரங்கொண்டான், ஆயுதக்களம் ஆகிய கிராமங்கள் அடங்கிய வனத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்குகின்ற ஜெயங்கொண்டம்

2017 ஜூன் 15]

Range–ல் *4,504* ஏக்கரும், ஆண்டிமடம் Range–ல் *3,500* ஏக்கரும், உடையார்பாளையம் Range–ல் *3,500* ஏக்கரும், ஆக மொத்தம் *11,504* ஏக்கரில் முந்திரி சாகுபடி வனத் துறையின் கட்டுப்பாட்டில் செய்யப்பட்டு வருகின்றது. அதேபோல...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு திரு. ராமஜெயலிங்கம், மூலக் கேள்வியை நீங்கள்தான் கேட்டிருக்கின்றீர்கள். 2 துணைக் கேள்விகள் இருக்கின்றன. முதலில் ஒரு துணைக் கேள்வியைச் சீக்கிரம் கேட்டு முடியுங்கள்.*

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் முடித்துவிடுகின்றேன். எனவே, தற்போது 11,504 ஏக்கர் வனத் துறை நிலத்திலும், பல்லாயிரம் ஏக்கர் உள்ள தனியார் நிலங்களிலும் 80 கிலோ எடை கொண்ட 2 இலட்சம் மூட்டைகள் முந்திரி சாகுபடி செய்யும் நிலையில், ஜெயங்கொண்டத்திலோ அல்லது ஆண்டிமடத்திலோ ஒரு முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலை அமைத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதால் அதனை அமைத்துத்தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுந்த தொழில் முனைவோர் வந்தால், டிட்கோ நிறுவனத்துடன் இணைந்து சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, உடனடியாக ஜெயங்கொண்டம் தொகுதியில் முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலை அமைப்பதற்குண்டான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.*

திரு.ஜெ.கே.என்.ராமஜெயலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட சின்னவளையம் என்ற இடத்திற்கு மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் வந்து முந்திரி பயிர்*

சாகுபடி செய்வதையெல்லாம் ஆய்வு செய்தார்கள். அந்தப் பகுதி முந்திரிக்குப் பெயர்போன பகுதியாகும். அதேபோல் அங்கே பெண்களுக்கு வேலைவாய்ப்பும் அதிகமாகக் கிடைக்கும். முந்திரிக் கொட்டை உடைத்தல், தோல் உரித்தல், தரம் பிரித்தல் போன்ற பணிகளையெல்லாம் பெண்களுக்கு வழங்க முடியும். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், கேட்டவற்றையெல்லாம் கொடுக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் கலந்து பேசி, அங்கே டிட்கோ நிறுவனத்துடன் இணைந்து ஒரு முந்திரித் தொழிற்சாலை அமைக்கப்படும் என்று கூறியுள்ளார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி, அதனைத் துரிதப்படுத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்டங்களை உள்ளடக்கிய முந்திரி வேளாண்மை ஏற்றுமதி மண்டலத்தை அமைக்க இந்திய அரசின்* Agricultural and Processed Food Products Export Development Authority *மற்றும் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறையினிடையே 12–4–2005 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. அரியலூர் மாவட்டமும் இதில் அடங்கியுள்ளதால்,* Agricultural and Processed Food Products Export Development Authority*–யுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ள நிலையில், தகுந்த தொழில் முனைவோர்கள் முன்வந்தால், சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து,* TIDCO*–உடன் இணைந்து உடனடியாக தொழிற்சாலையை அமைப்பதற்குண்டான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.*

திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் படித்த இளைஞர்கள் பலர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அங்கு ஒரு தொழில் மையம்தான்

இருக்கிறது. அந்தத் தொழில் மையத்தில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், புதியதாக ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மண்டலத்தில் தொழிற்சாலை தொடங்க வேண்டும் என்று மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட 9 மாவட்டங்களுள் கன்னியாகுமரி மாவட்டமும் அடங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சாத்தியக்கூறுகள் இருப்பின்,* SIPCOT *நிறுவனத்தின் மூலமாக நிலம் கையகப்படுத்தி, தொழிற்பேட்டை அமைப்பதற்குண்டான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

17—

அரசு பொது மருத்துவமனை

***4127—திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, சோழிங்கநல்லூரில் பொது மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*